நாள்: 14.08.2026

**ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
சிவபுரம், புதுக்கோட்டை – 622 422

## போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு மினி மாரத்தான் (Walkathon) - அறிக்கை

தமிழ்நாடு அரசு மற்றும் கல்லூரிக் கல்வி இணை இயக்குநரகம் வழிகாட்டுதலின் படி, புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரியின் **“போதைப் பொருள் தடுப்புக் குறித்த விழிப்புணர்வு மினி மாரத்தான் (Walkathon)”** நிகழ்ச்சி இன்று 14.08.2026 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வினைக் கல்லூரி முதல்வர் முனைவர் ஐ.பரசுராமன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். கல்லூரியின் போதைப் பொருள் தடுப்புக் குழு (Anti-Drug Club), இளையோர் செஞ்சிலுவை சங்கம் (YRC) மற்றும் உடற்கல்வித்துறை இணைந்து இந்நிகழ்வினை ஒருங்கிணைத்தன.

இந்த மினி மாரத்தான் போட்டியில் கல்லூரியின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மொத்தம் 256 மாணவர்கள் கலந்துகொண்டு போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தினர். மாணவர்கள் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாதைகள் (Placards) மற்றும் சுவரொட்டிகளை (Posters) ஏந்தி, போதைப் பழக்கத்திற்கு எதிரான கோஷங்களை எழுப்பி, கல்லூரி மாணாக்கர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

“போதைக்கு அடிமையாவதைத் தவிர்ப்போம் - வாழ்வை நேசிப்போம்” (Say No to Drugs – Say Yes to Life) என்னும் முழக்கத்தை முன்னிறுத்தி, மாணவர்கள் தங்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தினர். இந்நிகழ்வில் பங்கேற்ற அனைத்து மாணவர்களையும், சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த ஒருங்கிணைப்புக் குழுவினரையும் கல்லூரி முதல்வர் மற்றும் நிர்வாகத்தினர் பாராட்டினர்.

முதல்வர்